**27.07.2022**

**OS.No. 136/2020 DW : 2, திரு. சின்னதுரை**

**குறுக்கு விசாரணை...**

1ம் வாதியின் தந்தையும், என்னுடைய தந்தையும் ஒன்றாக சேர்ந்து சொத்தை கிரையம் வாங்கியதாக நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரைய ஆவணத்தில் உள்ள கருப்பு செஞ்சி நாயக்கர் என்பவர் வேறு நபர் என்றும் என் தந்தை பெயர் செஞ்சி நாயக்கர் என்று சொன்னால் சரியல்ல. சொத்தை கிரையம் வாங்கிய பின்னர் சின்னா நாயக்கர் என்பவர் மட்டும் சொத்தை அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. சின்னா நாயக்கர் இறந்தபின்னர் அவர் கிரையம் வாங்கிய சொத்தை அவரது வாரிசுகளான 1ம் வாதியும் அவரது அண்ணன் பட்டுசாமியும் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. பட்சுசாமி 1988 ல் காலமானார். அவர் இறந்த பின்னர் அவரது வாரிசுகளான 2 முதல் 5 வாதிகள் 1ம் வாதியுடன் சேர்ந்து சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு கருப்பு செஞ்சி நாயக்கர் என்ற ஒரு நபரை தெரியாது என்றும் அப்படி ஒரு நபரே எங்கள் ஊரில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தந்தையை தவிர வேறு யாரும் கருப்பு செஞ்சி நாயக்கர் என்று ஊரில் இல்லை. 80 வயதான 1ம் வாதியிடம் கருப்பு செஞ்சி நாயக்கர் என்று சொல்லிக் கொண்டு பாதி பாகம் கேட்டு யாரும் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. கருப்பு செஞ்சி நாயக்கரின் வாரிசுகள் யாரும் பாகம் வேண்டும் என்று 1ம் வாதியிடமும்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

கேட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே பாகத்தை பிரித்து கொடுத்துவிட்டார்கள். பத்திரத்தில் மட்டும் கருப்பு செஞ்சி நாயக்கர் பெயர் இருக்கிறது என்றும் ஆனால் சொத்துக்கள் முழுவதும் வாதிகளின் அனுபவத்தில் தான் இருக்கிறது என்றும் அது ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 1996 வரை வாதிகள் சொத்தில் விவசாயம் செய்துவந்தார்கள் என்றும் அதற்கு பின்னர் அது தரிசாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. அதற்குபின்னர் தான் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று நாங்கள் திட்டமிட்டோம் என்றால் சரியல்ல. எங்கள் கிராமத்தில் செஞ்சி நாயக்கர் என்ற பெயரை சர்வ சாதாரணமாக வைப்பார்கள் என்று சொன்னால் எங்கள் குடும்பத்தை தவிர வேறு யாரும் வைக்கமாட்டார்கள். நான் என் தந்தை பெயர் கருப்பு செஞ்சி நாயக்கர் என்று எதிர்வாதம் செய்கிறேன். என் சித்தப்பாவான சின்னசாமி நாயக்கரும் அவரது தந்தை பெயர் கருப்பு செஞ்சி நாயக்கர் என்று கூறிவருகிறார் என்றால் அது பொய் ஆகும். கருப்பு செஞ்சி நாயக்கரின் மகன் என்ற முறையில் நான் காமாட்சிக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்தேன். கருப்பு செஞ்சி நாயக்கர் என்ற ஒரு நபரும் இல்லை என்றும் அவர் பெயரில் சொத்து இல்லை என்றும் நான் போலியாக செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்திருகிறேன் என்றால் சரியல்ல. அந்த செட்டில்மெண்ட் ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. நான் திருத்தணி சர்க்கரை ஆலையில் வேலை பார்த்து

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

ஓய்வு பெற்றுவிட்டேன். 1984ல் அவர் அவர் நிலம் கொடுத்து வேலை வாங்கிக்கொண்டார்கள். நானும் திருத்தணி சர்க்கரை ஆலை மேலாளண்மை இயக்குநருக்கு 4 சென்ட் எழுதி கொடுத்தேன். அந்த கிரைய ஆவணத்தில் என் தந்தை பெயர் செஞ்சி நாயக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணத்தை கணக்குபிள்ளை எழுதி வைத்திருந்தார் அதில் நான் கையொப்பம் போட்டுவிட்டு வந்தேன். நான் கிரைய ஆவணத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய படிப்பு சான்றிதழில் என் தந்தை பெயர் செஞ்சி நாயக்கர் என்று தான் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. நிலம் கொடுத்தவர்களுக்கும் பள்ளி சான்றிதழின் அடிப்படையில் எங்கள் ஊரில் பொதுவான பணிநியமன உத்தரவை கொடுத்தார்கள். அது 18வது பெயராக என் பெயர் இருக்கிறது. அந்த பணிநியமன உத்தரவு வா.சா.ஆ.29. அதில் என் தந்தை பெயர் செஞ்சி நாயக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கிரைய ஆவணத்தின் அடிப்படையில் எழுதியிருக்கிறார்கள். கிராமத்தில் எங்களுக்கு சொந்தமாக வீடு மற்றும் நிலங்கள் என் தாத்தா காலத்திலிருந்தே இருக்கிறது. எங்கள் இடங்களுக்கு ஒரு பட்டா பாஸ்புத்தகம் கொடுத்தார்கள். அதில் என் பெயரும் என் தந்தை பெயரும் மற்றும் சர்வே எண்களும் இருக்கிறது. என் தந்தை பெயரில் உள்ள பட்டா பாஸ்புத்தகத்தின் நகல் என்னிடம் காட்டப்படுவதுதான். அது வா.சா.ஆ.30. அதில் என் தந்தை பெயர் செஞ்சி நாயக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சிறுவயதாக இருக்கும்போது

S
GANAPATHISAMY

Digitally signed by
S
GANAPATHISAMY

அதை கொடுத்திருக்கிறார்கள். அந்த பட்டாவில் தாவா சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா பெயர் காப்புகார செஞ்சி நாயக்கர். அவருக்கு 3 மகன்கள். அவருக்கு 4மகன்கள் என்றும் அவர்கள் வெங்கடாசல நாயக்கர், என் தந்தை மற்றும் 2 சின்ன செஞ்சி நாயக்கர் என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு 3 மகன்கள் தான். ஒரு சின்ன செஞ்சி நாயக்கருக்கு சின்னசாமி என்ற மகன் பிறந்தார் என்றும் இன்னொரு சின்ன செஞ்சி நாயக்கருக்கு சரோஜா என்ற மகள் என்றால் அது பெய்யாகும். சரோஜா என்பவர் எங்கள் தில்லுமுல்லுக்கு ஒத்துவரவில்லை என்றும் ஆகவே தான் அவரது தந்தை பெயரையே மறைக்கிறோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5ல் வெங்கடாசலம் நாயக்கர், செஞ்சி நாயக்கர், சின்ன செஞ்சி நாயக்கர் மற்றொரு சின்னசெஞ்சி நாயக்கர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது ஒரு சின்னசெஞ்சி நாயக்கர் இறந்திருக்கலாம். வா.சா.ஆ.5ல் கருப்பு செஞ்சி நாயக்கர் என்ற பெயர் இல்லை. அதில் தாவா சொத்துக்களும் இல்லை. நானும், 1ம் பிரதிவாதி மற்றும் 7 பிரதிவாதிகள் ஆகியோர்கள் தனித்தனியாக ஆவணங்களை தயார் செய்துகொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணங்களை பற்றி வாதிகளுக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 2019ல் தாவா சொத்தில் நாங்கள் வீடுகட்ட ஆரம்பித்தோம் என்றும் ஆகவே பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1984ல் நான் வீடு கட்டினேன். 2019ல் பிரச்சனை ஏற்பட்டது என்றும் எங்கள் பெயரில்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

பத்திரம் இருப்பதாக நாங்கள் சொன்னோம் என்றால் சரியல்ல. அதற்கு பின்னர் தான் ஆவணங்களின் நகல்களை வாதிகள் வாங்கி பார்த்தார்கள் என்றும் அந்த ஆவணங்கள் போலியானது என்று தெரிந்தது என்று சொன்னால் சரியல்ல. நிலஅபகரிப்பு பிரிவில் வாதிகள் எங்கள் மீது புகார் கொடுத்தார்கள். வாதிகள் சின்னா நாயக்கரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை கொடுத்தார்கள் என்றும் நாங்கள் தான் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறோம் என்று வந்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் நாங்கள் என் தந்தையின் இறப்பு சான்றிதழையோ அல்லது வாரிசு சான்றிதழையோ தாக்கல் செய்யவில்லை. நாங்கள் பாகப்பிரிவினை செய்துகொண்டதற்கான ஆவணங்களை என் வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். நாங்கள் வாய்மொழியாக பாகம் செய்யவில்லை. என் தந்தையும், 1ம் வாதியின் தந்தையும் சொத்துக்களை பிரித்துக்கொண்டதற்கான ஆதாரம் இருக்கிறது அதை தாக்கல் செய்ய இருக்கிறேன். 1 ஏக்கர் 30 சென்ட் நிலத்தை பிரித்துக்கொண்டோம். பத்திரத்தில் எந்த எந்த நெம்பரில் எவ்வளவு சொத்திருக்கிறது என்று எனக்கு தெரியாது. நாங்கள் ஆளுக்கு 15 சென்ட் என்று கடந்த 15 வருடத்திற்கு முன்பு பிரித்துக்கொண்டோம். 1ம் வாதியோ அவரது தந்தையோ யாருடனும் பாகம் செய்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தந்தைக்கு 15 சென்ட்-ம் வெங்கசடாசலத்திற்கு 15 சென்ட், என் சித்தப்பா சின்னசாமி நாயக்கர் 15 சென்ட்-ம் பாகம் கிடைத்தது. வெங்கடாசலம் நாயக்கர் 1959ல் காலமானார்.

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

தாவா சொத்தை எப்போது கிரையம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. 1962ல் ஆவணம் பதிவுசெய்யப்பட்டது. நாங்கள் ஆளுக்கு 15 சென்ட் என்று பிரித்துக்கொண்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. சாலை அமைக்க கொஞ்சம் இடத்தை எடுத்துக்கொண்டார்கள். எப்போது எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதற்கு நஷ்டஈடு எதையும் வாங்கவில்லை. சாலை அமைக்க நிலம் எதையும் எடுக்கவில்லை என்றும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.14 ஆதார் அட்டையை 2010ல் வாங்கினேன். பி.வா.சா.ஆ.16, 17 மற்றும் 18 ஆவணங்களில் கருப்பு செஞ்சி நாயக்கர் என்று கிரையதாரர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பின்னர் ஏற்பட்ட வா.சா.ஆ.28-ஆன கிரைய ஆவணத்தில் என் தந்தை பெயர் செஞ்சி நாயக்கர் என்று இருக்கிறது. வா.சா.ஆ.28 எழுதப்பட்ட அன்றே ராமன் கனிகராஜக்கு ஒரு கிரையம் கொடுத்தார் என்றும் நாங்கள் செய்த தில்லுமுல்லை மறைப்பதற்காக என் தந்தை பெயரை மாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல.

(நேரமின்னை காரணமாக ஒத்திவைக்கப்படுகிறது).

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

I Additional District and Sessions Judge,
Tiruvallur.